**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.07
https://ngmtamil.in/

# Female emotions in Antonbeny's poems

**N. Balamurugan[1*], Dr. T. Rajkumar, [2],**
[1]Research Scholar (2), Ph.D. Research Scholar, Nallamuthugounder Mahalingam college, Pollachi, Coimbatore, Tamilnadu, India
[2]Associate Professor, Research Supervisor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Coimbatore, India. Email: trajkumartamil@gmail.com, Tel: 94430 66480
[*]Correspondence: nila.balu76@gmail.com.

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

The prominent aspect of Anton Benny's poetry largely revolves around ordinary people and socially relevant thoughts. This constitutes one half of the poet's work. The other half of his poetry focuses on his mother who gave him life, his wife who shared his life, his daughter who became his life, and the simple women he observed and admired. He has written about the women he admired, and also about the women who influenced him. He has written about those he loved, and about those who loved him. He has written about the one who gave him life, and about the one who is his life. He has beautifully captured the emotions of women. The purpose of this article is to explore this collection of emotions.Keywords: Anton Benny's works, mother, wife, daughter, village women.

**Keywords**; *Anton Benny. Female Emotions, Tamil Poems, Tamil Literature*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# ஆண்டன்பெனி கவிதைகளில் பெண் உணர்வுகள்

*[1]**ந. பாலமுருகன்,** ஆய்வாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி,
கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா
[2]**முனைவர் த. ராஜ்குமார்,** இணைப் பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோவை, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்:**

ஆண்டன் பெனியின் கவிதைகளின் முகமானது எளிய மனிதர்களைப் பற்றியும், சமுதாயத்திற்குத் தேவையான சிந்தனைகளைப் பற்றியும் அதிகம் உள்ளது. இது கவிஞருடைய கவிதைகளின் ஒரு பாதி முகமாகவே உள்ளது. கவிதைகளின் மறுபாதி முகம் எதுவென்று பார்த்தால் தனக்கு வாழ்வு தந்த தாய், தன்னோடு வாழ வந்த தாரம், தனக்கு வாழ்க்கையாகிப் போன மகள் மற்றும் தன்னால் பார்த்து இரசிக்கப்பட்ட எளிய பெண்களைப் பற்றியான கவிதைகளே மறுபாதியாக உள்ளது. தான் பார்த்து வியந்த பெண்களை எழுதியுள்ளார், தன்னைப் பாதித்த பெண்களைப் பற்றியும் எழுதியுள்ளார். தன்னால் நேசிக்கப்பட்டவர்களைப் பற்றி எழுதியுள்ளார். தன்னை நேசித்தவர்களைப் பற்றியும் எழுதியுள்ளார். தனக்கு உயிர்தந்தவரைப் பற்றியும் எழுதியுள்ளார். தனக்கு உயிரானவரைப் பற்றியும் எழுதியுள்ளார். பெண்களின் உணர்வுகளை அழகாகப் பதிந்துள்ளார். அந்த உணர்வுகளின் தொகுப்பைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்: ஆண்டன் பெனி படைப்புகள்**, **தாய்**, **தாரம்**, **மகள்**, **காதலி**.

## முன்னுரை;

கவிஞரின் கவிதையின் வரிகளில் எல்லாம் பெண்களின் உணர்வுகளை உருக்கி மையாக்கி எழுதியுள்ளார். பல இடங்களில் உணர்வுகளை வெளியில் நின்று பார்க்கின்றார். சில இடங்களில் தானே ஒரு பெண்ணாக மாறி அந்த உணர்வுகளை வெளிப்படுத்துகிறார். தாயின் சிறப்புகளைப் பதிவு செய்யும் இடங்களில் தாயின் அத்தனை உணர்வுகளையும் சிறப்பாக கவிதையில் வெளிக்கொணர்ந்துள்ளார். உலகத்தின் உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்கும் ஒவ்வொரு அம்மாக்களின் மனதின் குரலாக கவிஞரின் கவிதைகள் உள்ளன. கவிஞரின் கவிதைகளில் ஒப்பனைச் சொற்கள் இருப்பதில்லை, கற்பனைச் சொற்களும் இருப்பதில்லை. அதற்குப்பதிலாக தான் கண்ட, தான் உணர்ந்த, தான் வாழ்ந்த சொற்களை எல்லாம் சேர்த்து கவிதைகளாக்கியுள்ளார். அக்கவிதைகளுக்கு உயிராக பெண்ணின் உணர்வுகளைக் கொடுத்துள்ளார்.

## தாயின் உணர்வுகள்

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 

தாயின் சிறப்புகளைப் பதிவு செய்யும் இடங்களில் தாயின் அத்தனை உணர்வுகளையும் சிறப்பாக கவிதையில் வெளிக்கொணர்ந்துள்ளார். உலகத்தின் உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்கும் ஒவ்வொரு அம்மாக்களின் மனதின் குரலாக கவிஞரின் கவிதைகள் உள்ளன. தனது அன்பிற்குரிய குழந்தை கையில் உள்ள பலூனை தவறவிடுகிறது. அந்தப்பலூன் வீசுகின்ற காற்றில் பறக்கிறது. இந்தச்சிறு நிகழ்வை கவிதையாக்கி அந்த நிகழ்வில் தாயின் உணர்வை உள்ளிருக்கும் காற்றாக மாற்றுகிறார் கவிஞர்.

**“கையிலிருந்து**
**நழுவிய**
**பலூனைத் துரத்தும்**
**குழந்தையைக்கூட**
**கவனிக்காமல் வீசும்**
**இந்தக்**
**காற்றைத்தான்**
**நானும் சுவாசிக்க**
**வேண்டியிருக்கிறது“**

அம்மாவின் இசைக்குறிப்பு ப.15

தனது குழந்தையின் கையில் இருந்து காற்றில் பறக்கும் பலூனைத் துரத்தும் குழந்தையின் மனநிலையைப் படம் பிடிப்பதோடு, அந்தக்காற்றால் தனது குழந்தையின் மகிழ்ச்சி பறிபோகிறது என வேதனைப்படுவதாக கவிதையை முடிப்பதுடன், அந்த வேதனையைத் தந்த காற்றைத்தான் நானும் சுவாசிக்க வேண்டியுள்ளது என்று அழகாக முடிக்கின்றார் கவிஞர்.

குழந்தைகளின் மொழிகளை இரசிக்கும் நாம், அவர்களின் வினாக்களுக்கோ, பேச்சுகளுக்கோ பதில் கூறுவதில்லை. பல இடங்களில் பேசுவதற்கான வாய்ப்புகளை நாம் கொடுப்பதில்லை. குழந்தைகள் எப்போதெல்லாம் பேச ஆரம்பிக்கின்றனவோ அப்போதெல்லாம் அவர்களின் வார்த்தைகள் சிறைப்படுத்தப்படுகின்றன.

மெல்லமாய் பேசத்தொடங்கும் குழந்தையின் நிலையில் இருந்து கவிதையொன்றைப் படைத்துள்ளார் கவிஞர். அக்கவிதையில் தனது தாயின் உணர்வுகளை உள்ளே புகுத்தியுள்ளார்.

**“ஒரு ஊர்ல ஒரு ராஜா…**
**எனத் தொடங்கும்போதே**
**“மிஸ் அவர்தான் என் அப்பா**
**அந்த ராணிதான் என் அம்மா“**
**என்கிற குழந்தையிடம்**
**வாயை மூடு என்கிறார் மிஸ்**

**காதை மூடிக்கொள்கிறது**
**அந்தக் கதைக்களம்"**

அம்மாவின் இசைக்குறிப்பு ப.16

குழந்தைகளின் உணர்வுகளை மதிக்காத நிலை அனைத்து இடங்களிலும் இருப்பதை நாம் அனைவரும் உணர்ந்தே உள்ளோம்.

குழந்தைகளை நேசிக்கும் தாயின் உணர்வுகளை அதிகளவில் வெளிப்படுத்துகிறார் கவிஞர். குழந்தைகளின் குறும்புகளில் அதிகப்படியாக இருப்பது கிறுக்கல்கள்தான். அந்தக் கிறுக்கல்களை இரசிக்கும் தாயின் மனநிலையை,

**"பாடங்கள் எழுதியதுபோக**
**கோடுகள் வரைந்ததுபோக**
**மகளின்**
**நோட்டுப் புத்தகத்தில்**
**மீதமிருப்பவை**
**காகிதக் கப்பல்கள்"**

அம்மாவின் இசைக்குறிப்பு ப.17

குழந்தைகளின் கிறுக்கல்களை எல்லாம் பார்த்து மகிழும் பெற்றோர்கள் கிடைத்த குழந்தைகள் எல்லாம் கடவுளின் குழந்தைகளாக மாறிவிடுகிறார்கள். ஆனால் கடவுளின் குழந்தைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே உள்ளார்கள் என்று தனது ஏக்கத்தையும் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்.

குழந்தைகள் விளையாடும் நேரங்களில் எல்லாம் அழகாகத் தெரிவார்கள். உறங்கும் நேரங்களில் எல்லாம் பேரழகாகத் தெரிவார்கள். அவர்களை இரசிக்காதவர்கள் யாரும் இருக்கப் போவதில்லை. உறக்கத்தில் குழந்தைகளின் சிரிப்பும், குழந்தைகளின் மொழியும், குழந்தைகளின் அசைவுகளும் எப்போதும் மனதை கொள்ளை அடிப்பவையாகவே இருக்கும். அவற்றைப் பார்த்து மகிழும் அம்மாவின் மனதினை கவிஞரின் கவிதையொன்று மிக அழகாகப் படம் பிடித்துக்காட்டுகிறது.

**"உறக்கம் கலையும் எல்லாக் காலையிலும்**
**ஏதாவதொரு பூந்தொட்டியில்**
**மலர்ந்திருப்பாள் மகள்"**

அம்மாவின் இசைக்குறிப்பு ப.37

குழந்தைகளைப் பார்த்து ஒவ்வொரு நொடியும் மகிழும் அம்மாவின் உணர்வினை மிகவும் நுட்பமாகப் பதிவுசெய்துள்ளார் கவிஞர்.

அம்மாக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் அழகியலான கவிதை ஒன்றைக் கொடுத்துள்ளார் கவிஞர். அதில் அம்மாவின் மன ஓட்டங்களில் நம்மையும் நகர்த்திச் செல்கிறார் கவிஞர்.

**"அம்மாவிடம்**
**இரண்டு பொய்கள் இருந்தன**
**தன் வயிற்றுக்கும் கேட்கும்படியாக**
**'பசிக்கவில்லை' என்றொரு பொய்**
**தன் மனதுக்கும் கேட்டுவிடாதபடி**
**'நல்லாத்தான் இருக்கேன்' என**
**மற்றொரு பொய்"**

அம்மாவின் இசைக்குறிப்பு ப.39

அம்மாவாக, வீட்டின் தலைமையாக, வீட்டின் அடையாளமாக மாறிய அனைத்து அம்மாக்களும் இப்படியாகவே வாழ்கின்றனர் என்பதைக் கவிஞரின் கவிதை நமக்குள் புகுத்திவிடுகிறது. கவிதை என்பது வெறும் எழுத்துகளாக இங்கு இருப்பதில்லை. அம்மாவின் ஒட்டுமொத்த உணர்வாகவே நமது மனதில் பதிகிறது.

அம்மாவிற்கு நாம் செய்யும் மிகப்பெரிய சேவை பெரியதாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. நாம் அவர்களிடம் கேட்கின்ற சில ஆறுதலான சொற்களே அவர்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுக்கும். நம் மீது நமது மகன் அல்லது மகள் அக்கறையோடு உள்ளார்கள் என்ற நம்பிக்கை வந்துவிட்டாலே அவர்களின் வேதனைகள், வலிகள் எல்லாம் மருத்துவரும், மருந்துகளும் இல்லாமலே குணமாகிவிடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

**காதலியின் உணர்வுகள்**

ஒரு பெண் எப்போது தன்னை உணர்கிறாள் என்பதைக் கவிதையின் வழியாக நமக்கு உணர்த்துகிறார் கவிஞர். நம்மை ஒருவர் விரும்பும்போதுதான் நமக்கே நம்மைப் பிடிக்கும் என்பதைக் கவிஞர் காட்சிப்படுத்துகிறார். இந்த உலகத்தில் நம் மீது அன்பு செலுத்தும் துணை கிடைப்பது என்பது இந்தப் பிறப்பில் செய்த பாக்கியமாக இருக்கவேண்டும் என்பது கவிஞரின் எழுத்துகளில் பதிவாகியுள்ளதை நாம் உணரலாம்.

**"யமுனாவை**
**நான் கவனிக்கத் தொடங்கிய பிறகே**
**தன்னிடமிருந்த**
**காதலைத் தேடத் துவங்கினாள்"**

யமுனா என்றொரு வனம் ப.21

மனதிற்குள் எத்தனைக் காதல் இருந்தாலும் அவை சில நேரங்களில் வெளியில் வருவதில்லை. பல நேரங்களில் வெட்கத்தைத்தான் கொடுக்கும். யாருமில்லாத தனிமையில் அவருடன் என்னவெல்லாம் பேசவேண்டும் என ஒத்திகை பார்க்கும் காதலி நேரில் எதையும் பேசாமல் தள்ளிப்போவதை இங்கே கவிதையாக்கியுள்ளார் கவிஞர்.

**"காதல் என்றதும்**

**வெட்கம் நிரம்பிவழிய**
**யமுனா ஓடிவிடுகிறாள்**
**வேறொரு வார்த்தையில்**
**சொல்லிவிட வேண்டும்".**

யமுனா என்றொரு வனம் ப.21

தனது காதலியை விட்டு நீண்டதூரம் பயணிக்கிறார் கவிஞர். தூரங்கள் அதிகரித்தாலும் காதலும் அதிகரிக்கிறது இருவருக்கிடையில். கடிகாரமும், தினசரி நாள்காட்டியும் மெதுவாக நகர்வதாக இருவருமே உணர்கின்றனர். இதை எப்படிச் சரிசெய்வதென்பது இருவருக்கும் புரியாத புதிராகவே உள்ளது.

**"எனக்கு ரயில் ஜன்னல்**
**உனக்கு வீட்டு ஜன்னல்**
**நினைவுக் கம்பிகளில் உதிர்கிறது**
**அன்புக்கான மகரந்தங்கள்"**

யமுனா என்றொரு வனம் ப.26

நீண்ட தூரம் இருக்கும் தனது யமுனாவை நினைத்து எழுகிறார் கவிஞர். யமுனாவும் தன்னைப்போல்தான் இருக்கும் என்பது கவிஞரின் ஆழ்மன உணர்வாகும். சாளரத்தின் வழியே கடந்து செல்வதை எல்லாம் வேடிக்கை பார்ப்பவர்களாகத் தானும் யமுனாவும் இருப்பதாகக் குறிப்பிட்டு கவிதையை முடித்துள்ளார் கவிஞர்.

பிரிவின் வலிகளைத் தாங்குவது என்பது பெரும்பாலும் சிந்துகின்ற கண்ணீர் வழியாகத்தான் முடியும். நம்முடைய கண்ணீருக்கு அதிகப்படியான வலிகளைக் கரைக்கும் திறனுண்டு என்பதை வலி வந்த நாட்களில் நாம் அனைவரும் உணரலாம். கவிஞரின் கருத்தினை ஒட்டிய மற்றொரு கவிதையைக் காணலாம்

**உன் கண்ணீரையும்**
**நேசிக்க வேண்டியிருக்கிறது**
**உன் கண்களை**
**நேசித்ததால்**

அரூப நர்த்தனம் ப.எ.64

அரூப நர்த்தனம் என்ற நூலில் கவிஞர் பூபாலன் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

காதலியின் ஒவ்வொரு நிகழ்வையும் கவிஞர் ரசித்துக் கொண்டுள்ளார். ரசிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் ரசித்ததை வெளிப்படுத்துவதில்தான் நல்ல காதலும் அடங்கியுள்ளது என்பதை கவிஞர் நமக்கு உணர்த்துகிறார்.

**"நீ அழகி என்பதை**
**கோலத்தின் முதல் புள்ளியே அறியும்**
**இருந்தும் பேரழகியாக**
**முழுக்கோலத்தையும்**

**வரைந்து முடிக்கிறாய்"**

யமுனா என்றொரு வனம் ப.29

முழுக் கோலமும் வரைந்தால்தான் எப்போதும் அழகாக இருக்கும் என்பதை நாம் உணர்வோம். ஆனால் கவிஞர் தனது காதலி வரைந்த கோலத்தை ரசிக்கும் முன்பே அது அழகாக உள்ளது என்பதைத் தனது கவிதையில் எழுதியுள்ளார்.

காதலி இல்லாமல் மெல்ல நகரும் நாள்களும், காதலியை விட்டுப் பிரிந்து செல்லும் நாள்களிலும் பயணம் என்பதே பெரும் வலியைத்தான் தரும். எத்தனை நபர்கள் நம்முடன் பயணித்தாலும் நாம் இந்த உலகில் யாருமற்ற தீவில் தனியாளாய் பயணிப்பதாய் நமக்குள் எண்ணங்கள் தோன்றுவதை தவிர்க்க இயலாமல் போராடுகிறார் கவிஞர்.

**"என் இரயில் பயணங்களிலெல்லாம்**
**ஜன்னலுக்கு வெளியே**
**உனக்கொரு இருக்கை**
**கிடைத்து விடுகிறது"**

யமுனா என்றொரு வனம் ப.30

உடன் யாரும் இல்லாதபோதும் யமுனா தன்னோடு வருவதாய் நினைத்தபடி கவிஞர் பயணிக்கிறார்.

**தாரத்தின் உணர்வுகள்**

பெண்ணின் ஒட்டுமொத்த உணர்வுகளின் தலைவன் தன்னுடையவனான கணவனே. கணவனின் விருப்பங்களாக எதுவெல்லாம் இருக்கிறதோ, அவற்றில் எல்லாம் நான் அங்கு இருப்பேன் என்பதாக பெண் தன்னுடைய ஏக்கத்தை நாள்தோறும் தொடர்கிறார்.

**"நினைவுகளை**
**உன்னில்**
**நிறுத்தியிருக்கிறேன்**
**என் ஆன்மாவின்**
**ஒற்றைப் புள்ளி**
**நீ"**

(அவள் நிறமி 19)

எனது கணவனே எல்லாவற்றிற்கும் உரியமையானவன். அவனை எந்த நேரத்திலும் எதற்காகவும் எப்பொழுதும் இழந்துவிட நான் விரும்பவில்லை என்பதாக இக்கவிதையில் கூறுகிறார் கவிஞர். என்னவன் என்று நான் சொல்வது வெறும் வார்த்தையல்ல அவனே எனக்கு எல்லாமுமானவன் என்பதாக கவிதை நீள்கிறது.

**"அரவணை**
**ஆற்றுப்படுத்து**

**அக்கறை கொள்**
**அதனினும் காமம்**
**மீச்சிறு"**

(அவள் நிறமி 20)

காமம் மட்டுமே எப்போதும் ஒரு பெண்ணை முழுமையாக திருப்தி படுத்துவதில்லை. காமம் தாண்டிய காதலும், காமத்துடன் கலந்த காதலும், காமம் இல்லாத காதலும் ஒரு பெண்ணுக்கு எப்போதும் தேவைப்படுகிறது என்பதை கவிஞர் கூறுகிறார்.

**"பறவைகள்**
**கூடடைந்துவிட்டன**
**ஆந்தை நீ**
**வீடடையவில்லை"**

(அவள் நிறமி 21)

கவிஞரின் கருத்தினை ஒட்டிய கவிதை ஒன்றினை கவிஞர் விவெ அவர்கள் தனது கவிதை நூலில் படைத்துள்ளார்.

**சிறு வருடலோ**
**சிறு தழுவலோ**
**சிறு முத்தமோ**
**போதுமாயிருக்கிறது நம் இருவருக்கும்**

வானவில்லுக்கு ஒன்பது நிறம் ப.எ. 73

தனது மனதிற்கு நெருக்கமான தனக்கானவனைத் தேடும் மனதிடம் தனக்குத்தானே ஏக்கத்துடன் பேசிக்கொள்வது போல கவிதையை நயம்படக் கூறியுள்ளார் கவிஞர்.

**"பெருவானில்**
**நீ**
**வட்டமிட்டது**
**போதும்**
**வந்து**
**என் மீது**
**அமர்"**

(அவள் நிறமி 23)

தனிமையின் வேதனையை ஒரு பெண் எப்படி உணர்த்துகின்றாள்? தனிமையை எப்படி ஒரு பெண் எதிர்கொள்கின்றாள்? என்பன போன்ற கேள்விகளுக்கு பதிலாக பல கவிதைகளை பெண்ணின் மனதில் அமர்ந்து பதில் அளித்துள்ளார் கவிஞர்.

**செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை**

திருக்குறள் – 1151

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 

உலகம் போற்றும் திருக்குறளிலும் பொய்யாமொழிப்புலவர் கூறிய கருத்தினை ஒட்டியே கவிஞரின் கற்பனையும் உள்ளது. என்னைவிட்டுப் போகமாட்டேன் என்னோடு மட்டும் இருப்பேன் என்றால் என்னிடம் சொல்லிவிட்டுச் செல். என்னைவிட்டுப் பிரிந்து பொருள் ஈட்டுவதற்குச் செல்வதாக இருந்தால் நீ திரும்பி வரும்போது யார் உயிருடன் இருப்பார்களோ, அவர்களிடம் சொல்லிவிட்டுச் செல் என்று வள்ளுவர் உரைக்கின்றார்

தன்னுடன் கணவன் நீண்ட நேரம் உடன் இருக்கவேண்டும் என ஆசைப்படுகின்றாள். தன்னை கவனித்துக்கொள்ள வேண்டும். தனது எண்ணங்களுக்கேற்ப, தனது ஆசைகளுக்கேற்ப அவருடன் இருக்கவேண்டும் என்ற தனது ஆசைகளை மனதுடன் வைத்துக்கொள்ளும் ஒரு பெண்ணின் முனகல் ஒலியாக ஒலிக்கிறது மற்றொரு கவிதை

**“உன் வருகைக்கும்**
**விடை பெறுதலுக்கும்**
**இடைப்பட்ட நேரம்**
**இரவு என்றே அழைக்கப்படுகிறது“**

(அவள் நிறமி 26)

கணவன் பொருளீட்டச் செல்கின்றான். தனது மனைவியை மிகவும் அழகாக வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று அவன் நினைக்கின்றான். ஆனால் மனைவியோ எனக்கு பெரும் செல்வம் தேவையில்லை நீ மட்டும் போதும் என்பதாக நினைக்கின்றாா். கவிஞரின் இக் கருத்தினைப் போன்ற மற்றொரு கவிதையை கவிப்பேரரசு வைரமுத்து படைத்துள்ளதைக் காணலாம்.

**பூப்போன்ற சோறு**
**பொரிக்காத கீரை**
**காய்ந்த பழங்கள்**
**காய்கறிச் சாறு**
**பரிமாற நீ**
**பசியாற நாம்**
**இது போதும் எனக்கு**

பெய்யெனப் பெய்யும் மழை ப.எ.101

பொருளீட்டச் செல்லும் தனது கணவனைப் பிரியும் நெடிய வலியை நீண்ட கவிதையாகச் சொல்லாமல் குறுங்கவிதையின் வழியாக கொட்டித்தீர்க்கிறாள் பெண். மிகக் குறைந்த வார்த்தைகளில் பெரும் வலி புதைந்துள்ளது என்பதை வாசிக்கும்போதே உணர்ந்து கொள்வது எளிதாக இருக்கிறது.

பணி நிமித்தமாக வெளியூரில் உள்ள கணவனை, காதலாகிப்போனவனை நினைத்தபடியே பெண்ணின் வாழ்க்கை நகர்வது என்பது பெரும்பாலும் இயலாத காரியமாகவே இருக்கும். அப்படி வாழும் ஒரு பெண்ணின் உணர்வுகளை அவளின்

மனதிற்குள் சென்று, அதன் வலிகளையும், துக்கங்களையும் உணர்ந்தபடி எழுதுகின்றார் கவிஞர்.

**“உயிரோடிருக்கிறாய்**
**என்பதை**
**அவ்வப்போது**
**நம்பவைத்துவிட்டாய்**
**அன்பாயிருப்பதையும்**
**எப்போதாவது**
**உணரவையேன்“**

(அவள் நிறமி 70)

தனது கணவனின் ஆசைகளை அறிந்து வாழ்பவள்தான் அவள். ஆனாலும் சில நேரங்களில் தனது குழந்தைகளின் கேள்விகளுக்கு பதில் சொல்ல இயலாத தருணங்களில் கணவனை நினைத்து ஏங்குகிறாள் அவள். வலிகளைத்தாங்க எப்போதும்தான் தயாராக இருந்தாலும் குழந்தைகளுக்கு அந்த வலியைக் கொடுக்க தயாராக இல்லை அவள்.

**மகளின் உணர்வுகள்**

ஒவ்வொரு பெற்றோருக்கும் பெருமகிழ்வைத் தருவது தங்களின் குழந்தைகள் இந்த மண்ணில் பிறக்கையில் முதல்முறையாக பார்ப்பதும், அடுத்த தலைமுறையை கைகளில் ஏந்துவதும்தான். அக்குழந்தைகள் வளர வளர அவர்களின் பெற்றோர்களின் சிறகுகளும் வானத்தில் பறக்கிறது. இந்த வானத்தில் உள்ள மொத்த மகிழ்ச்சிகளை எல்லாம் ஒன்றுதிரட்டி தங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று அவர்களின் எண்ணங்கள் விரிகிறது.

**பிறந்ததும்**
**வெள்ளைத் துணியில்**
**ஏந்திக் கொடுத்தார்கள்**
**என் இளஞ்சிவப்புத் தேவதையை**
**அதன் மூடிய இமைகளுக்குள்**
**இரு விழிகள்**
**அசைவது போலத்தான் இருந்தது**
**அதுவரையில் என் இதயம்.**

மகளதிகாரம் ப.11

தனது குழந்தையை முதன்முதலாக ஏந்திக் கொண்ட நொடியை மிகவும் அழகான எடுத்துக்காட்டுடன் கவிதையாகக் கொடுத்துள்ளார். இதை வெறும் கவிதையாக நாம் பார்க்க இயலவில்லை. கவிஞரின் மன உணர்வின் முழுமையான வெளிப்பாடாக இதைக் கூறலாம். விழிகளையும் இதயத்தையும் இணைத்துக் கவிதையாக்கிக் கொடுத்ததில் கவிஞரின் முழு மனதினையும் நாம் அறியலாம்

ஒவ்வொரு தந்தைக்கும் உலகின் பெரும் செல்வம் தனது மகளே என்பதைக் கவிஞர் தனது கவிதையின் மூலமாக மிகவும் அழகாக உணர்த்துகின்றார்.

**மகள்**
**சாதம் பரிமாறிய போது**
**தட்டில்**
**கொஞ்சம் சோறும்**
**நிரம்பி வழியும் சந்தோசமும்**
**இருந்தன**

மகளதிகாரம் ப.14

இதே கருத்துடைய மற்றொரு கவிதையில் கவிஞர் தனது மகளின் செயலை குறிப்பிடும்போது,

**சமையலறையிலருந்து**
**எனக்காக**
**மகள்**
**தோசை வரைந்து வருகிறாள்**
**பசியை விலக்கிவிட்டு**
**மனசு நிறையத் தொடங்கிற்று**

மகளதிகாரம் ப.42

தனது மகளுக்கு தோசை ஊற்றத் தெரியாதநிலையிலும் தந்தைக்கு கொண்டுவருகின்றார் என்பதை மிகவும் நுட்பமாக கூறும்வேளையில் அதை அழகானதாக மாற்றுகிறார்.

கவிதை என்பது நமது உள்ளார்ந்த உணர்வுகளை வார்த்தைகளில் வடிப்பதுவே ஆகும். தனது மகள் தனக்குச் சரியாகப் பொட்டு வைக்காமல் போன நிகழ்வை தனது உணர்வுகளைக் கொண்டு சரி செய்கின்றார் கவிஞர். மகளுடனான நிகழ்வினை கூறும் கவிதையின் வார்த்தைகளை அன்பினைக் கொண்டு வார்த்திருக்கிறார்.

**அவசரத்தில்**
**பொட்டு வைத்துப் போனாள்**
**மகள்**
**அதற்கு நேராக**
**என் புருவங்களை**
**நகர்த்திக் கொண்டேன்**

மகளதிகாரம் ப.16

கவிஞர் தனது கவிதையில் மகளின் ஒவ்வொரு அசைவையும் ஒவ்வொரு செயலையும் அழகியலோடுதான் பார்க்கின்றார் என்பதை நாம் கவிதையை வாசிக்கும் தருணத்தில் உணர முடிகிறது.

**குவளை நீர் முழுவதும்**
**சிந்திவிட்டாலும்**
**மகள்**
**கொண்டு வந்ததில்**
**என் தாகம் தீர்ந்தது.**

மகளதிகாரம் ப.20

**முடிவுரை**

ஆண்டன் பெனி அவர்கள் தனது நூல்களில் பெண்களான தாய், தாரம், தமக்கை, தோழி என்று பல உறவுகளுக்கு முக்கிய இடத்தை வழங்கியுள்ளார். பெண்களைப் போற்றும் நாடு நம்முடைய நாடாகும். பெண்களை தெய்வமாகவும், பெண்களை முதன்மைப்படுத்தியும்தான் இன்றுவரை நம்முடைய நாடு உள்ளது. அதைக் கவிஞரும் சரியாகக் கையாண்டுள்ளார். தன்னுடைய கவிதை முழுவதிலும் பெண்களைக் கொண்டாடியுள்ளார். தன்னுடைய கவிதை முழுவதிலும் பெண்களை முதன்மைப்படுத்தியுள்ளார்.

**துணைநூற் பட்டியல்**

[1]. வானவில்லுக்கு ஒன்பது நிறம் –கவிதை நூல் – இலக்கிய படைப்புக் குழுமம், படைப்பு பிரைவேட் லிமிடெட், சென்னை.
[2]. அரூப நர்த்தனம் –கவிதை நூல் – தமிழ் அலை, 3, சொக்கலிங்கம் காலனி, தேனாம்பேட்டை, சென்னை 600086.
**[3].** திருக்குறள் – விஜயா பதிப்பகம், 20 ராஜ வீதி, மணிக்கூண்டுக்கோபுரம், நகர்மண்டபம், கோயம்புத்தூர் 641001.
[4]. பெய்யெனப் பெய்யும் மழை – சூர்யா லிட்ரேச்சர் (பி) லிமிடெட், சென்னை.
[5]. அரூபத்தின் வாசனை – பொள்ளாச்சி இலக்கிய வட்டம், பில்சின்னாம்பாளையம், பொள்ளாச்சி.